# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.62/2022

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி – நாள் 11–11–2025.

பெயர் = ஜெயராமன் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.தொடர்ச்சி–

(1) என் தாத்தா பெயரில் இருந்ததாக சொல்லியுள்ள பட்டா எண் எனக்குத் தெரியாது. பட்டா நகல் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் தாத்தா பெயரில் பட்டா இல்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பட்டா இல்லாததால்தான் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பட்டா எண் எனக்குத் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்து சர்வே எண்.4/5 ல் இருப்பதாக சொல்லியுள்ள 27 செண்டில் தாவாச்சொத்தான 7 செண்டு எந்தப்பக்கம் இருக்கிறது என எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. தெற்குப்பக்கம் இருப்பதாக சாட்சி கூறுகிறார். பிராது சொத்து விவரத்தில் எந்தபக்கத்தில் தாவாச்சொத்து உள்ளது என குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வருவாய்த்துறையினரால் சர்வே எண்.4/5 ஏ, 5 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது தாவாச்சொத்திற்கு கணினிபட்டா எண்.2885 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் பட்டா மாற்றியிருக்கலாம் அதுபற்றி எனக்குத் தெரியாது.

(2) தற்போது தாவாச்சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்பதை பார்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கான செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் வசித்து வந்த கா.ராமசாமி யார் என்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா உள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றாலும் அதனை மறைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.16 வருவாய் கோட்டாட்சியரிடம் நான் கொடுத்த மனு என்றால் சரிதான். பட்டா மாறுதலுக்காக கொடுத்தேன் என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.16 1ம்

பிரதிவாதி பெயரில் பட்டா எண்.2885 மோசடியாக ஏற்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

(3) பட்டா பெயர் மாற்றம் செய்ய வருவாய்த்துறையில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 நான் தாக்கல் செய்த பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.12 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா இருந்த விவரமும், தாவாச்சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்ற விவரமும் எனக்குத் தெரிந்தும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டு நான் அனுபவித்து வரும் என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள சொத்து என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் இரண்டு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளது என சாட்சி கூறுகிறார். பூர்வீக பாத்தியம் உள்ளது என்பதற்கு என் தாயார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவாச்சொத்தை என் தாயார் அனுபவம் செய்து வந்தார் என்பதற்கு ரசீது எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 7 செண்டு என்பதால் ரசீது போடவில்லை என சாட்சி கூறுகிறார்.

(4) வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் பிராதில் சொல்லியபடி தாவாச்சொத்திற்கான பாகவிஸ்தி வழக்கான அ.வ.122/1959 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரையின்படி பாகத்தில் கிடைத்ததாக அதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து என் பெயரில் எழுதிக்கொடுப்பதற்கு என் தாயாருக்கு தாவாச்சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஊர்ஜிதத்திற்கு வரக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 8 வரையான ஆவணங்களான நீதிமன்ற நடவடிக்கைகளில் 1ம் பிரதிவாதியும் அவருக்கு தாவாச்சொத்தை எழுதிக்கொடுத்த நபர்களும் தரப்பினர்களாக இல்லை என்பதால் மேற்படி ஆவணங்கள் 1ம் பிரதிவாதிக்கு தாவாச்சொத்தில் உள்ள உரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. அ.வ.எண்.122/1959 தாவாச்சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டதா என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.6 ல் 9 வது இலக்கமாக காட்டப்பட்டுள்ள சொத்துதான் தாவாச்சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் சொல்லப்பட்டுள்ள குறிப்புகளில் 2 வதாக P6,P7,P2,P3,P4,P5 என சொல்லப்பட்டுள்ளது தான் தாவாச்சொத்து என்றால் சரிதான்.

(5) மேற்படி 2வது குறிப்பில் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.122/1959 வழக்கில் வாதி தாயம்மாள் என்ற வீரம்மாள், 1ம் பிரதிவாதி ராஜா பிரதிநிதி என்ற ராமசாமி நாயக்கர் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் படி தாவாச்சொத்து தாயம்மாள் என்ற வீரம்மாளுக்கும், ராஜா பிரதிநிதி என்ற ராமசாமி நாயக்கருக்கும் ஒதுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் தாவாச்சொத்து அவர்களோ அவர்களது வாரிசுகளோ அவர்களுக்கு பாத்தியப்பட்டது என சொல்லி 1ம் பிரதிவாதியிடம் பிரச்னை செய்தது கிடையாது என்றால் சரிதான். அ.வ.எண்.122/1959 வழக்கில் என் தாயார் 2ம் பிரதிவாதியாகவும், நான் 3ம் பிரதிவாதியாகவும், என் சகோதரர்கள் 4,5 பிரதிவாதிகளாகவும் உள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் படி தாவாச் சொத்து எங்களுக்கு ஒதுக்கப்பட்டதாக இல்லாதநிலையில் மேற்படி வழக்கில் சொத்து எங்களுக்கு ஒதுக்கப்பட்டது என சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாயம்மாள் என்ற வீரம்மாளுக்கும், ராஜா பிரதிநிதி என்ற ராமசாமி நாயக்கருக்கும் வா.சா.ஆ.6ன் பிரகாரம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ள நிலையில் அதனடிப்படையில் நீதிமன்றத்தில் சொத்தை ஒப்படைப்பு கோரியோ, பாகப்பிரிவினை கோரியோ மேல்நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

(6) தாவா சொத்தான 7 செண்டு தாயம்மாள் என்ற வீரம்மாளுக்கும், ராஜா பிரதிநிதி என்ற ராமசாமி நாயக்கருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபர்களால் தாவாச்சொத்து பிரித்து ஒப்படைப்பு பெறவில்லை என்பதால் தாவாச்சொத்தில் அவர்களுக்கு பாத்தியம் எதுவும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவாச்சொத்திலும் அருகில் உள்ள சொத்திலும் 1ம் பிரதிவாதி மக்காச்சோளம் பயிரிட்டுள்ளார் என்றால் வழக்கிற்கு பிறகு பயிரிட்டிருப்பார் என சாட்சி கூறுகிறார். வழக்கிற்கு முன்பாகவும் தாவாச்சொத்தில் 1ம் பிரதிவாதி மக்காச்சோளம் பயிரிட்டிருந்தார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து எங்கிருக்கிறது என எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நானோ, என் அம்மாவோ என் தாத்தாவோ அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆள்பலம் மிக்கவர் என்பதால் தாவாச்சொத்தை அவர் உழவு செய்துவிட்டதாக சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.9 ஆவணத்தை 1ம் பிரதிவாதி 09.12.2015லேயே கிரயம் வாங்கிவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார்.

(7) வா.சா.ஆ.9 பதிவு செய்யப்பட்டு 6 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளதால் ஆவணத்தை ரத்துசெய்யக்கோரி நான் கேட்டுள்ள பரிகாரம் காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச்சொத்து சர்வே எண்.4/5 வழக்கிற்கு முன்பாகவே 4/5 ஏ,5 பி என உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் தெரிந்திருந்தும் அதனை மறைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து ஆதியில் சீதாராமன்நாயக்கர் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் 12.02.1985 ம் தேதி 2,3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்து அவர் இறந்த பிறகு அது ஊர்ஜிதத்திற்கு வந்து 2,3 பிரதிவாதிகள் தாவாச்சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளிடமிருந்து 09.12.2015 ல் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்று அதுமுதல் 1ம் பிரதிவாதிதான் தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதன் அடிப்படையில்தான் பட்டா எண்.2885 கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

(8) ஆதியில் சீதாராமன்நாயக்கர் பெயரில்தான் தாவாச் சொத்திற்கு பட்டா ஏற்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தைப்பொறுத்து ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.9 யை ரத்துசெய்யக்கேட்டு பரிகாரம் கோரியுள்ள நிலையில் திருச்சுழி சார்பதிவாளர் இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் அவர் இவ்வழக்கில் சேர்க்கப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதாக நான் ஒப்புக்கொண்டதால் ஒப்படைப்பு பரிகாரம் கேட்கப்படாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் தேனிமாவட்டம், கம்பத்தில் வசித்து வருவதால் நானோ, என் மூதாதையரோ எப்போதுமே தாவாச்சொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.11 15:08:20 +0530